


# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## தளராத விசுவாசம் கொண்டிருப்போமாக!

முற்றிலும் தாறுமாறான துன்பத்தில், நம்பிக்கையோடு நிலைத்திருப்பதே விசுவாசம்! நூறு வயதான ஆபிரகாம், தன் சரீரம் செத்துப்போன நிலையில், அவன் ஜாதிகளின் தகப்பனாவான் என தேவனால் உரைக்கப்பட்டபோது "நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், நம்பி விசுவாசித்தான்" என ரோமர் 4:18-ம் வசனம் கூறுவதைப் பாருங்கள்! அவன் தேவனால் அழைக்கப்பட்டபோது "தான் போகும் இடம் இன்னதென்று அறியாமலே" புறப்பட்டுப் போனான் என எபிரெயர் 11:8-ம் வசனம் கூறுவதைப் பாருங்கள்! ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும், என சொல்லப்பட்ட பின்பும், அவனை தேவனுக்கு பலியாக ஒப்புக்கொடுத்து "மரித்தோரிலிருந்து அவனை எழுப்ப தேவன் வல்லவர்" என உரைத்த ஆபிரகாமின் கெம்பீரத்தை எபி.11:18-ம் வசனம் கூறுவதையும் பாருங்கள்! எல்லாவற்றிற்கும் மேலாய் "அவமானத்தை எண்ணாமல், பாவிகளின் விபரீதங்களை சகித்து" சிலுவை மரணம் ஜெயித்து 'தேவ சிங்காசனம்' அமர்ந்த நமதாண்டவர் இயேசுவை மகிழ்வுடன் கூறும் எபிரெயர் 12:2,3 வசனங்களையும் பாருங்கள்! இனிமுதல், நமக்கு நியமித்திருக்கும் விசுவாச ஓட்டத்தில், இயேசுவை நோக்கிப்பார்த்து தளராத பொறுமையோடு ஓடக்கடவோம்! *-tr*

பெட்டகம் 38 | ஜுன் 2022 | பரல்கள் 06



## இக்கட்டில், தம்முடையவர்களைப் பாதுகாக்கும் கர்த்தர்!

வல்லூறு அல்லது பருந்துகளின் வருகையை காகங்கள், மைனாக்கள் போன்ற பறவைகள் குரல் எழுப்பி.... பெலவீனமான சிறிய பறவைகள் தங்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள வசதியாக 'அவைகளை' முன்கூட்டியே எச்சரித்து விடுகின்றன! இப்படி எல்லாம் **தனது அற்பமான ஜீவராசிகளுக்கு** பாதுகாப்பை ஞானமாக வழங்கும் தேவன், சாவாமையுள்ள தமது சாயலாக மாறும்படி அழைக்கப்பட்ட அவரது பிள்ளைகளுக்கும், சாத்தானுக்குமுள்ள வாழ்வின் கடும் போராட்டத்தில் ஒத்தாசையாக எழுந்து வந்து, யுத்தம் செய்யும் கர்த்தராக இருப்பார் என்பது அதிக நிச்சயமல்லவா?

தமது தாசனாகிய தாவீதை, அவனது 'பிராண பகைஞனாகிய' சவுலுக்கு தேவன் ஒருபோதும் ஒப்புக்கொடுக்கவே இல்லை. நேருக்கு நேர் இருவரும் ஒன்றாக அரண்மனையில் இருந்தபோது, தனது கூர்மையான ஈட்டியை சவுல் அரசன் தாவீதின் மார்புக்கு நேராக எறிகின்றான். ஆனால், அந்த ஈட்டி தாவீதின் நெஞ்சை ஊடுறுவிச் செல்லாதவாறு **'தேவகரம் மாத்திரமே' அந்த இடத்தில் அவனைப் பாதுகாத்தது.**

"சவுலின் பட்டயம் வெறுமையாய் திரும்பினதில்லை" என்று தாவீதே கூறியுள்ளார் (2சாமு 1:22). ஆயினும், அந்த குறிப்பிட்ட நாளில் தேவன் அந்த பட்டயத்தை தமது தாசன் நிமித்தமாக வெறுமையாக திருப்பி அனுப்பி விட்டார்! அந்த நல்ல கர்த்தர் இன்றும் மாறாதவராய் தம்முடையவர்களைப் பாதுக்காப்பது அதிக நிச்சயமல்லவா?

*-Ed*


**'பரலோக பொக்கிஷங்கள்' வருட சந்தா ரூ. 150.00**

M.O அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell : 9843049935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## காத்திருந்து முன் செல்லுங்கள், ஜெயம் பெறுவீர்கள்!

**ப**யமும் அவிசுவாசமும் நிறைந்த இந்த உலகம் அறியாத, ஓர் மாபெரும் தேவ வார்த்தை உண்டு! அந்த வார்த்தை இந்த உலகத்திற்கு 'பைத்தியக்காரத்தனம்' போலவே தோன்றும்! தேவனுடைய அந்த வார்த்தை என்ன தெரியுமா? "நீங்கள் **நின்று கொண்டு** இன்றைக்கு கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்" என்பதேயாகும் (யாத்.14:13). தேவன் தரும் இந்த கட்டளை 'உத்தம விசுவாசிகளுக்கே' தரப்பட்ட கட்டளையாகும்!

ஒரு உத்தம விசுவாசிக்கு, தேவனுடைய வழி குறுகலாகி நெருக்கமாய் மாறிடும் நிலை ஏற்பட முடியும்! விவரிக்க முடியாத துன்பத்திற்குள்ளும் அவன் சென்றிட முடியும்! அந்த நிலையில், அவனால் பின்னால் போகவும் முடியாது, முன்னேறிச் செல்லவும் முடியாது! அவனுடைய வலது புறமும் பூட்டப்பட்டு, அவனுடைய இடதுபுறமும் பூட்டப்பட்டிருக்கும்! அவன் இப்போது செய்ய வேண்டியது என்ன? இந்த சரியான தருணத்தில்தான் எஜமானாகிய ஆண்டவரின் வார்த்தை "நீ நின்று கொண்டிரு!" என கட்டளை பிறப்பிக்கிறது. இதுபோன்ற தருணத்தில், எஜமானுடைய வார்த்தைக்கு மாத்திரமே அடிபணிந்து இருப்பதே அவனுக்கு நன்மை உண்டாகும்! அதற்குப் பதிலாக 'பொல்லாத ஆலோசனைக்காரர்கள்' பல்வேறு யோசனைகளைக் கொண்டு வந்து தருவார்கள். 'இச்சமயங்களில்' நம்பிக்கை இழக்கும் இந்த உலக மாந்தர்கள் "இனி பிரயோஜனமில்லை, உன் விசுவாசத்திலிருந்து வழிவிலகி, மடிந்து போவாயாக!" என்றே உரைப்பார்கள். **ஆனால் தேவனோ, தம்முடையவர்களுக்கு உற்சாகமான தைரியத்தை தந்து,** இப்படிப்பட்ட மோசமான நிலையிலும் "உன்மீது நான் வைத்த அன்பில் களிகூருவாயாக! என்றும், என்னுடைய உத்தமத்தில் நிலைத்திருந்து மகிழ்ந்திருப்பாயாக!" என்றுமே கனிவுடன் கட்டளையிடுவார்! இச்சமயத்தில்தான், உங்கள் உத்தம விசுவாசத்திற்கு எதிராக 'பல்வேறு குரல்' உங்களைச் சுற்றி வந்து கூக்குரலிடும்:

**1) கோழைத்தன குரல் :** ''*பின்வாங்கி நில்! இந்த உலகத்தாரைப் போலவே காரியத்தை நிறைவேற்று! இனி கிறிஸ்தவனாக ஜீவிப்பது கடினம்.... உன் விசுவாச கோட்பாடுகளையெல்லாம் விட்டுவிடு!*'' என்றே உங்களைத் தூண்டும்.

**நீங்கள் மெய்யாகவே தேவனுடைய பிள்ளையாய் இருந்தால், எவ்வளவு தான் சாத்தான் உங்களை அதைரியப்படுத்த முயற்சித்தாலும், அதை ஏற்றுக்கொள்ள உங்கள் மனம் ஒப்புதல் அளிக்காது!**

தேவனுடைய திவ்ய அதிகாரம் ''பெலத்தின் மேல் பெலன் நீ அடைய வேண்டும்'' என்று கூறி, இந்த வழியை விட்டு விலகிச் செல்ல, மரணமானாலும் அல்லது பாதாளமானாலும் இடைமறித்திட அனுமதிக்காதே! என்றே கட்டளையிடும். ''நீ நின்று கொண்டிரு!'' என்ற இந்த கட்டளையை உங்களால் ஏற்றுக்கொள்ள கூடாதா? இவ்வாறு கொஞ்சகாலம் நிற்பது, உங்கள் பெலனை அதிகப்படுத்தி, 'குறித்த காலத்தில்' நீங்கள் முன்னேறிச் செல்லவே வழிவகுக்கும் என்ற இரகசியத்தை அறிந்து கொள்ளுங்கள்.

**2) அவசரப்படுத்தும் குரல் :** ''*ஏதாகிலும் செய்ய முற்படு! சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் ஓடு! சும்மா நின்று காத்திருப்பது உன்னை சோம்பலாக்கி விடும்!*'' என குமுறும் குரல்! அவசரப்படுவது நீங்கள் 'ஏதாகிலும் செய்திட' வழிவகுக்கக்கூடும்! ஆனால், சும்மா இருக்கும்படி கட்டளையிட்ட ஆண்டவரை நீங்கள் நோக்கிப்பார்க்கும் போது ''*அவரோ, ஏதாகிலும் அல்ல, எல்லாவற்றையும் செய்து முடிப்பார்!*''

**3) 'என்னால் முடியுமென்ற' அகந்தையின் குரல் :** ''*உனக்கு முன் சமுத்திரம் இருந்தால் என்ன? அதற்குள்ளாக நீயே முன்னேறிச் சென்று அற்புதத்தைக் காண்பாயாக!*'' என்றே **சுய வலிமையின் அகந்தை** கூக்குரலிடும். ஆனால் விசுவாசமோ, மார்தட்டும் பெருமைக்கு செவிகொடாது! நம்பிக்கை இழக்கச் செய்யும் கோழைத்தனத்திற்கும் செவிகொடாது! அவசர உந்துதலுக்கும் செவிகொடாது! தேவன் ஒருவருக்கே செவிகொடுத்து ''அமைதியாய் நின்று கொண்டிருக்கும்!'' **அது எங்கும் அசையாமல் கற்பாறையைப்போல்** நின்று கொண்டிருக்கும்.

**4) 'நின்று கொண்டிருங்கள்'' தேவ குரல் :** பரிசுத்தவானாகிய *ஸ்பர்ஜன் இந்த தேவ குரலின் மேன்மையை குறிப்பிட்டு, இதுவே நீதிமான் நிற்க வேண்டிய நிலை! என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறும்போது, இந்த நிலையிலிருந்துதான் அடுத்து வரும் செய்கைக்குரிய ஆயத்தத்தை அவன் பெறுகிறான்! கட்டளையை எதிர்பார்த்திருக்கிறான்!* **எந்த திசை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற**

**குரலை கேட்க மகிழ்ச்சியோடும் பொறுமையோடும் காத்திருக்கிறான்!** இந்த தக்க தருணத்தில், மோசேக்கு தேவன் தெளிவாய் கூறினதுபோல், இஸ்ரவேல் ஜனங்களை நடத்தும்படி **"முன்னேறிச்செல்!"** என்ற வலிமையான தேவ கட்டளையை அவன் பெற்றிடுவான்! என, பரிசுத்தவானாகிய *சார்லஸ் ஸ்பர்ஜன்* நேர்த்தியாய் கூறினார்:

*"சிக்கலான வழியோ? அவசரம் ஏன் அமைதலாயிரு!*
*எல்லாம் தேவனுக்குத் தெரியாதா?*
*தாமதிக்கச் சொன்னது அவர் தானே!*
*தரிசித்து அல்ல, விசுவாசித்து நடவுங்கள்!*
*இன்னும் கொஞ்ச காலம் நம்பினால் என்ன?*
*சீக்கிரத்தில் இரகசியத்தின் பின்னணி அறிவீர்கள்*
*'அவரது செய்கையின் புன்முறுவல்'*
*சூரிய பிரகாசமாய் நம்மிலே உதித்து விடும்!*

பிரிய சகோதர சகோதரிகளே, எதுவும் நிச்சயம் இல்லாத காலமோ? காத்திருங்கள்! சிறிது சந்தேகம் ஏற்படுகிறதோ? தொடர்ந்து காத்திருங்கள்! எந்த செயல்பாட்டிற்கும் நீங்களாக முன் செல்லாதிருங்கள்! உங்கள் ஆவியில் ஒரு தடையை உணர்ந்தீர்களோ? அது நீங்கும் வரை காத்திருங்கள்! அதுவரை, நீங்களாக ஒருபோதும் முன் செல்லாதிருங்கள்!

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## கூட இருந்தவர்கள் சூழ்ச்சியால், அதிர்ச்சியுற்றேன்!

ஜெனிவா சென்ற பிரசங்கி, தலைமைபீடம் சென்று பிஷப் அவர்களைச் சந்தித்தார். 'அந்நாள்வரை' பிஷப் அவர்கள் என்மீது கரிசனையும் அன்பும் கொண்டிருந்தார். இப்போதோ, அவரை வற்புறுத்தி, என்னுடைய செல்வத்திலிருந்து வரும் வருடாந்திர வருமானத்தை ஆசிரம மடத்திற்கு மாதம் மாதம் செலுத்தாமல் 'மொத்தமாய்' நான் கொடுத்து விடும்படி செய்யவும், அதன்பின்பு என்னை 'ஜெக்ஸ்' (Gex) மடத்திற்கு தலைவியாய் நியமனம் செய்யும்படியும் கூறி, அவரை சம்மதிக்கச் செய்து விட்டார். அதுமுதல், ஜெனிவா கத்தோலிக்கர், இந்த பிரசங்கியை **'சின்ன பிஷப்'** என்றே அழைக்கத் தொடங்கினார்கள். பிரசங்கி எண்ணியபடியே 'தலைமை பிஷப்' அவர்களும் முடிவு எடுக்கும்படி செய்து விட்டார்!

தான் எண்ணிய காரியத்தை முடித்த மகிழ்ச்சியில், திரும்பி வந்த பிரசங்கி, என்மீது இப்போது சிறிதளவுகூட பரிவு காட்டவில்லை. முதல்படியாக, நான் அனுப்பும் எல்லா கடிதத்தையும் அலுவலகத்தில்

நிறுத்தி வைத்தார். எனக்கு வந்த கடிதங்களையும் என் கைக்கு வராமல் செய்தார்! இவ்வாறாக என் பாதுகாப்பிற்குள்ள அனைத்தையும் நான் துறந்து, இங்கு நான் சந்திக்கும் இன்னல்களை பாரீஸ் நகரத்திலுள்ள என் உறவினர்களும் என் சிநேகிதர்களும் அறியாதிருக்கும்படி கதவை அடைத்து விட்டார்.

எனக்கு உதவியாக அழைத்து வந்த இரண்டு பணிப்பெண்களில் ஒருத்தி, பாரீஸ் நகரத்திற்கே திரும்பி விட விரும்பினாள். அவளுக்கு அதிகமாக வேலை பளுவை சுமத்தியபடியால், எந்த ஓய்வும் இல்லாத நிலையில் மனம் வருந்தி ஊருக்குத் திரும்ப விரும்பினாள். மற்றொரு பணிப்பெண்ணை, யாதொரு உதவியும் எனக்குச் செய்யாதபடி முடக்கி வைத்தார்கள். தந்தை லா-கோம்பே சீக்கிரத்தில் வர இருந்தபடியால், இந்தப் பிரசங்கியின் தீய ஆவியை மென்மைப்படுத்துவார் என்றும், எனக்குரிய ஆவிக்குரிய நல்ல ஆலோசனைகளையும் தருவார் என்றும் எதிர்பார்த்து காத்திருந்தேன்!

இதற்கிடையில், என்னை அந்த மடத்து தலைவியாக மாற்றும் முயற்சியை ஆரம்பித்தார்கள்.

**நானோ “இதுபோன்ற பதவி எனக்குப் பிடித்தமில்லை! இது என்னுடைய அழைப்பும் அல்ல! அப்படியே சில காலம் மடத்து தலைமை பொறுப்பை ஏற்றாலும், தொடர்ந்து இந்த பணி செய்ய என்னால் இயலாது” என கூறிவிட்டேன்.**

அதற்குப் பிறகும் என்னை அவர்கள் கட்டாயப்படுத்தியதால் நான் அவர்களிடம் “மடத்து தலைவி பொறுப்பிற்கு இரண்டு காலம் பயிற்சி கொடுக்கிறார்கள். நானும் அவ்வாறே பயிற்சி எடுக்கும் காலத்தில், **தேவன் எனக்குத் தரும் அழைப்பை சார்ந்தே** இந்த மடத்து தலைவியின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியும் என திட்டவட்டமாய் கூறிவிட்டேன். அச்சமயத்தில் அதிக கோபமடைந்த கத்தோலிக்க மடத்து தலைவி “அப்படியானால், நீ பிறகு எடுக்க வேண்டிய முடிவை இப்போதே எடுத்து, மடத்தை விட்டு போய்விடு!” என ஆத்திரமாய் கூறினார். நானோ அமைதியாய் இருந்தேன்! ஏனெனில் **எதையும் அவசரமாய் முடிவு எடுக்க தேவன் என்னை இதுவரை நடத்தவில்லை!** எப்படியிருந்தாலும், கார்மேகமும், புயலும் எப்பக்கத்திலிருந்தும் என்னைத் தாக்க நெருங்கி வந்ததைக் கண்டேன்.

‘என்னுடைய அமைதியைக் கண்ட’ மடத்து தலைவி, என்மீது கரிசனை கொண்டே எல்லாவற்றையும் அவர்கள் பேசினதாக பாவனைசெய்தார்கள். நான் எப்போதும்போல் என் ஆவியில்

*விடுதலையாய் இருந்தபடியால், எதையும் நேர்மையாய் பேச நான் தயங்கியதில்லை. ஆகவே நான் அவர்களைப் பார்த்து "இந்த மடத்து புதிய சீர்திருத்த கத்தோலிக்க முறைமையின்மீது எனக்கு எந்த ஈர்ப்பும், நம்பிக்கையும் ஏற்படவில்லை" என மனம் திறந்து நேர்மையாய் கூறிவிட்டேன்.*

**என் ஜீவியத்தின் எல்லை முழுவதும் நான் நேர்மையாய் நடந்து வாழ்ந்தபடியால், இந்த மடத்தில் நடைபெற்ற கபடும் சூழ்ச்சியும் எனக்கு சிறிதும் இஷ்டம் இல்லாமல் போயிற்று!**

*என்னுடைய நிலையை புரிந்து கொண்டதைப்போல் காண்பித்த மடத்து தலைவி, என்னைப் பார்த்து "எனக்கும் இங்குள்ள சில காரியங்கள் பிடித்தமில்லைதான். ஆனால் இங்குள்ள பிரசங்கி, நம் மடத்தைக் குறித்த மேன்மையை பல நாடுகளுக்கு அறிவித்து, பாரீஸ் நகரத்திலிருந்து வரக்கூடிய தேவையான நன்கொடைகளை வாங்கிவிட வேண்டும் என விரும்புகிறபடியால், நானும் இவைகளைச் செய்கிறேன்!" என கூறினார்கள்.*

*மடத்து தலைவியின் பதிலைக் கேட்டு, என் உள்ளம் வேதனையடைந்தது. இச்சமயத்தில், என் அந்தரங்க வாழ்க்கையின் உறுதிப்பாட்டையும், உத்தமத்தையும் கூற வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு உண்டாயிருந்தது. ஆகவே நான் கூறினேன்:*

> *"மதிப்பிற்குரிய தலைவி அவர்களே, நீங்கள் கூறியதில் என் மனம் உடன்படவில்லை. ஏனென்றால், நாம் தேவனுக்கு முன்பாக நேர்மையாக நடந்தால், நம்மை தேவன் ஒருபோதும் கைவிடமாட்டார். இந்த காலத்திலோ அல்லது வெகு சீக்கிரத்திலோ விரைந்து வந்து நமக்காக பெரிய அற்புதங்களைச் செய்வார்" என கூறினேன். நான் தொடர்ந்து கூறுகையில் "நேர்மைக்கும் உத்தமத்திற்கும் மாறாக தந்திரமான முறையில் நன்கொடை உதவி நாடுவது ஜனங்களிடத்தில் காட்ட வேண்டிய* ***உண்மையான நேசத்தை*** *கறைப்படுத்திவிடும்! ஏனென்றால், ஜனங்கள் மீது மாறாத நேசத்தையும் மனதுருக்கத்தையும் கொடுப்பவர் தேவன் மாத்திரமேயாவர். அப்படியிருக்க 'மறைத்து வைத்த மாய்மாலத்தால்' நாம் வைத்திருக்கும் தெய்வ அன்பை பாதுகாக்க இயலாது!" என்றே கூறினேன்.*

*இவ்வாறு நான் கூறிய உண்மையை, மடத்து தலைவியார் ஏற்றுக்கொள்ள மனதில்லாமல் முகத்தை கடுப்பாய் வைத்து, சென்றுவிட்டார்கள்!*

*- மேடம் குயான்*

## 'கிறிஸ்துவுக்குள் ஏழை' அவருடைய கிருபைக்கு ராஜனாவான்!

*உங்களின் ஏழ்மையான தேவைக்கு, உங்கள் இருதயமான வீதியில் நின்று, தேவனிடம் பகிரங்கமாய் கூப்பிட்டு கேளுங்கள்! தேவையை பூர்த்தி செய்யும் "தெய்வ கிருபை" வழங்கப்பட்டவுடன், உங்கள் முழு ஆத்துமத்தின் பெலனோடு, அருளப்பட்ட கிருபையை மகிழ்வுடன் வாங்கிக் கொள்ளுங்கள்! தேவனால் உங்கள் தேவைக்கு அருளப்பட்ட சிறிய இரக்கத்தைக் கூட நன்றியில்லாமல் வாங்கிவிடக் கூடாது. உங்கள் ஆத்துமத்திற்கு எஜமானாகிய அவர் அருளிய நன்மைகள் ஒவ்வொன்றிற்கும் 'கணக்கு வைத்து' போற்றித் துதி செய்யுங்கள்! கர்த்தர் உங்களுக்கு அளித்த திரள் நன்மைகள் 'மறந்துபோகும் குழிக்குள்' புதைக்கப்பட ஏன் அனுமதிக்க வேண்டும்?*

*உங்கள் ஆத்துமாவின் கதவு எப்போதும் தேவை நிறைந்ததாய் திறக்கப்பட்டதாயிருப்பதாக! உங்கள் இதய வீதியில் அமர்ந்து, ஆவியாகிய தேவன் அனுப்பும்* **கிருபை பொக்கிஷங்களை** *இருதயத்திற்குள் பிரவேசித்திட வழி வகுத்து அனுப்புங்கள். பரலோக வங்கியிலிருந்து வாங்கி வரும் செயல், ஒருநாள் கூட நின்று விடாமல், பாதுகாப்பீர்களாக! இப்போது உங்கள் தேவையெல்லாம் பூர்த்தி செய்யப்பட்டதாய் தோன்றினாலும்* **'மற்றொரு தேவையின் நேரம்'** *எப்போது வருமென்று விழிப்புடன் காத்திருங்கள்! அந்த தேவை வரும்போது, சற்றும் தாமதியாமல் தேவையின் நிரூபணமாகிய காசோலையோடு, தேவனுடைய பொக்கிஷசாலைக்கு துரிதமாய் ஓடுங்கள்.*

> **தரித்திரனாகிய உங்கள் தேவை ஏராளமாய் இருக்கிறபடியால், இயேசுவின் பரிபூரணத்திற்கு முன்பாக 'கை ஏந்த முடியாதபடி' எந்த காரணத்திற்கும் இடம் கொடாதிருங்கள்!**

*எப்போதாவது அவ்வித நிலை ஏற்பட்டால், அவர் சமூகத்தில் அமர்ந்து உங்கள் இருதயத்தை விசாலமாக்குங்கள். அப்போது, உங்கள் இருதயத்தின் வெற்றிடத்தை* **தெய்வ அன்பு** *நிறைத்து ஆண்டுகொள்ளும்!*

*'ஏதோ ஒரு லௌகீக ஐசுவரியம்' ஆண்டவராகிய இயேசுவிடமிருந்து ஒவ்வொரு நாளும் வருகின்ற ஆசீர்வாதங்களை நிறுத்திவிட அனுமதிக்காதிருங்கள்! மையப் பகுதியான தேவை ஒன்றே ஒன்றுதான்:* **"அவரே என்னுடைய தொடர்ச்சியான தேவை!"** *உண்மைதான், எனக்காக பரிந்துரைக்கும் அவரது ஜெபம் எனக்குத் தேவை! என்னைத் தாங்கும் அவரது கரம் எனக்குத் தேவை! அவரது*

*பரிசுத்தமாக்கும் கிரியை எனக்குத் தேவை! எனக்கு உள்ளும் புறமும் நடைபெறும் கிரியைகள் அனைத்திற்கும் அவர் தேவை! அவர் மீண்டும் வரும் நாள்வரைக்கும் நான் பாதுகாக்கப்படுவது என் தேவை! கிறிஸ்து இல்லாமல் என் ஜீவியத்தில் யாதொன்றும் என்னால் செய்திட முடியாதே, ஆகவேதான் அவரது வாசலில் எப்போதும் காத்திருக்கிறேன்!*

**என்னை சந்திக்கும் அனைத்து தேவைகளும், என் இருதயம் என் இரட்சகரை நோக்கி திரும்பியிருக்கிறதா? என்பதை நினைவூட்டும் அடையாளமாயிருக்கிறது!**

*எனக்கு ஏற்படும் தாகமே, தண்ணீருக்காக என்னை தவிக்கச் செய்தது! எனக்கு ஏற்படும் வலிகள், மருத்துவரை நாட நினைப்பூட்டுகிறது.*

*அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, உங்கள் தேவைகள் இயேசுவிடத்தில் நடத்துவதாக! அவ்வேளையில் பாக்கியம் நிறைந்த ஆவியானவர், கர்த்தரை உங்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவாராக! அவ்வேளையில், தன் அன்பின் ஐசுவரியத்திலிருந்து சகலத்தையும் உங்களுக்கு அருளிச்செய்வார். ஏழை கிறிஸ்தவனே, உனக்கு ஏற்படும் அனைத்து தரித்திர தேவைகளும் 'உன் செல்வந்த நேசரிடம்' உன்னை இழுத்துக்கொள்ளும் அன்பின் கயிறாக மாறுவதாக. ஆகவே, உங்கள் பெலவீனத்தைக்குறித்து மகிழ்ந்து களிகூருங்கள்! ஏனெனில், அதுவே தெய்வ கிருபை உங்கள் நெஞ்சத்தில் தங்குவதற்குரிய அறைகளை உண்டாக்குகிறது! தொடர்ச்சியான தேவைகள் வருவதினிமித்தம் மகிழ்ச்சி அடையுங்கள்! அதுஏனென்றால், உங்கள் இரட்சகரோடு இடைவிடாத ஐக்கியத்திற்கு அந்த தேவைகள் உங்களை உந்துகிறது!*

*உங்களை ஆராய்ந்து பார்த்து, உங்கள் தேவைகள் இன்னதென்று நாடுங்கள்! வீட்டிலுள்ள உங்கள் மனைவி வைத்திருக்கும் பொருட்களை அடுக்கி வைப்பதற்கு, அறைகளைத் தேடுவதுபோல் தேடுங்கள். உங்கள் தேவைகள், இயேசுவின் கிருபைகளை சேர்த்து வைக்கும் அறைகளாக கண்டு, அதில் ஒரு இடமும் காலியாய் இல்லாதபடி கிருபையினால் நிறைத்திடுங்கள்! இதுவரை நீங்கள் இயேசுவை ருசித்ததை விட அதிகமாய் ருசித்திட நாடுங்கள். இவ்வாறு,* **பாக்கியம் நிறைந்த ஏழ்மை** *தேவனுக்குரிய பெரிதான காரியங்களை நாடுவதற்கு உங்களை உந்தித் தள்ளுவதாக!*

*- சார்லஸ் ஸ்பர்ஜன்*

## "நம்மில் ஒருவராய் மாறி" நம்மை இரட்சித்த இயேசு!

இரட்சகர் பெற்ற தண்ணீர் முழுக்கு ஸ்நானம் ஆழ்ந்த கருத்துள்ளது. யோவாஸ்நானுக்குப் பிறகுதான் இதன் இரகசியம் வெளியானது! அவருடைய ஸ்நானம் இரகசியமே, அநேகருக்கு அது ஆச்சரியமே! அவர் ஏன் பாவிகளுக்குரிய ஸ்நானத்தைப் பெறவேண்டுமென்று திகைப்போடு கேட்பவர்களும் அநேகர் (மத்.3:14). அவர் நாசரேத்திலிருந்து நேரே யோர்தான் நதிக்கரைக்கு வந்து, யோவான் பக்கத்தில் நின்றுகொண்டு, யோவானுடைய ஊழியத்தில் அவருக்கு உதவிசெய்திருப்பாரானால், அது நமக்கு ஆச்சரியமாயிருக்காது. அதற்குப் பதிலாக, பாவிகளோடு சேர்ந்து அவர்கள் பெற்ற ஸ்நானத்தை இவரும் பெற்றுக்கொள்வதைப் பார்க்கிறோம்! ஏனெனில், மற்றவர்களுக்கும் இவருக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டல்லவா:

**மற்ற ஜனங்கள் தங்கள் பாவங்களுக்காக ஸ்நானம் பெற்றார்கள். இவரோ தமது பாவங்களுக்காகவல்ல, ஜனங்களுடைய பாவத்தைத் தமது பாவமாகப்பாவித்து, அவர்களுடைய துக்கங்களைத் தமது துக்கமாகவும், அவர்களுடைய பாரத்தைத் தமது பாரமாகவும், அவர்களுடைய அவமானத்தைத் தமது அவமானமாகவும், அவர்களுடைய சஞ்சலத்தைத் தமது சஞ்சலமாகவும் ஏற்றுக்கொண்டு, அவர்களோடு தம்மை ஒன்றாக்கி, அவர்களோடு சேர்ந்து நதியில் இறங்கி ஸ்நானம் பெற்றார்!**

வேதம் போதிக்கிறபடி, ஸ்நானம் மரணத்துக்கு அடையாளம்! இயேசுவின் ஜீவியத்தின் முடிவில் வரப்போகிற மரண தோற்றத்தை ஊழிய ஆரம்பத்திலேயே காண்கிறோம். "நான் பரிசுத்தன், பாவிகளே! என்னைவிட்டு விலகிப்போங்கள்" என்று அவர் சொல்லாமல், ஜனங்களே! நான் மனுஷகுமாரன், உங்கள் எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமானவன்! நான் உங்கள் சகோதரன், உங்கள் பாவபாரத்தை நானே சுமந்து, அன்பின் பிதாவோடு உங்களை ஒப்புரவாக்க வந்தேன் என்று நிரூபிக்கிறவராக, அவர்களுடைய ஸ்நானத்தில் தம்மையும் ஒன்றாக்கினது அவருக்கு நீதியாகயிருந்தது: "**அக்கிரமக்காரரில் ஒருவராக** எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்தார்" என்னும் தீர்க்கதரிசன வார்த்தைகள் எவ்வளவு உண்மை! (ஏசா.53:4). அவ்வார்த்தைகள் நிறைவேறுகிற ஆரம்பத்தை, முதன்முதல் யோர்தான் நதிக்கரையில் காண்கிறோம். இதிலிருந்து அவரது மரணபரியந்தம், தமது அன்பிலும் அனுதாபத்திலும்

*பாவிகளோடு தம்மை ஒன்றாக்கி, அவர்களுடைய பிரதிநிதியாகவும்! பிணையாளியாகவும்! விளங்கினார் என்பதை சுவிசேஷத்தில் தெளிவாய் காணலாம்.*

*இவர் பாவிகளோடு தம்மை ஒன்றாக்க வேண்டிய அவசியமென்ன? பாவம், மனுஷனைத் தனித்தவனும் சிறுமைப்பட்டவனுமாக்கிற்று. எல்லா வேதனையிலும் பெரிய வேதனை, பாவத்தால் விளையும் மனச்சாட்சியின் வேதனை! யூதாஸ் ஸ்காரியோத்துக்குக் கிடைத்த சிலாக்கியம் எவ்வளவு பெரிது! அன்பின் ஆண்டவருடைய அப்போஸ் தலர்களில் ஒருவனாயிருந்தான். அவருடைய திருச்சமூகமும், கிருபை நிறைந்த வார்த்தைகளும் அவனுக்கு இடைவிடாமல் கிடைத்தன. அவரோடும், உடன் அப்போஸ்தலரோடும் இணைக்கப்பட்டிருந்தான். பாவம் அவனுக்குள் பிரவேசித்தது. அது முதலாவது இரட்சகரை விட்டு அவனைப் பிரித்தது! துரோக சிந்தை அவனுக்குள் ஆரம்பித்தபோதே ஆண்டவருக்கு அது தெரியும். மற்றப்பதினொருவருக்கும் இன்னும் அது மறைவாகவேயிருந்தது. அந்தப்பாவம் அவனில் பூரணப்பட்டபோது, சீஷர்களையும் விட்டுப்பிரிந்தான்! கிறிஸ்துவோடும், அப்போஸ்தலரோடும் ஐக்கியமாயிருப்பது இனிமேல் அவனால் கூடாது!*

*'பாவம்' யூதாஸை நல்லோர் சிநேகத்தை விட்டுப்பிரித்தது! ஆகிலும், பொல்லார் சிநேகம் அவனுக்குக் கிடைத்தது. ஆண்டவரின் விரோதிகளோடு சேர்ந்து கொண்டான். சீக்கிரத்தில் அவர்களையும் விட்டுப்பிரிய நேரிட்டது! பாவம் அவனை வாதிக்கவே, "இதோ உங்கள் பணத்தை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்" என்கிறான். அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன் பாடு என்கிறார்கள்! யாதொரு துணையுமற்ற மகா நிர்ப்பந்த மனுஷனானான். மிகுந்த கலக்கம் நிறைந்தவனாக,* **எங்கே ஓடுவேன் பாதகனானேன் என்று புலம்பினான்.** *நடந்ததென்ன? வேகமாய்ப்போய் தன் உயிரை மாய்த்துக்கொண்டான்.*

**இந்த யூதாஸைப்போல் பாவத்திகிலையும் அவமானத்தையும் தாங்கக்கூடாமல், தாங்கள் உயிரோடிருப்பதைப் பார்க்கிலும் செத்துப்போவதே உத்தமமென்று, தங்களைத் தற்கொலை செய்து கொண்டவர்கள் அநேகர்!**

*பாவம் மெய்யாகவே மனுஷனைத் 'தனிமைப்படுத்தி' திக்கற்றவனாக்குகிறது. பாவஜீவியத்தால் நாம் விழுங்கப்பட்டுப் போகும்போது, குடும்பத்தில் சஞ்சரித்தாலும் குடும்பம் நமக்கில்லை! மனைவிமக்களோடிருந்தாலும், மனைவி மக்களோடில்லை! கிறிஸ்துவின் தூய சபையில் உலாவினாலும், அவர்கள்*

சந்தோஷத்தில் அவர்களுக்குப் பங்கில்லை! சிரிக்கிறவர்களோடு சிரித்தாலும், அது பொய் சிரிப்பேயன்றி மெய்யல்ல! **பாவம் நிச்சயமாகவே மனுஷனைத் தனித்தவனும் சிறுமைப்பட்டவனுமாக்குகிறது!**

இயேசு பகவான் நமது இரட்சகரென்பது மெய்யானால், பாவத்தினால் தனித்தவனும் சிறுமைப்பட்டவனுமாகிய பாவிக்குத் திடன் சொல்லி, அவனைக் கைத்தூக்கி இரட்சிக்க வேண்டுமல்லவோ! அவர் பெற்ற ஸ்நானத்தில் அவர் செய்த முதல் வேலை அதுதான். "ஜனங்களே! உங்கள் பாவங்கள் உங்களைப் பாரப்படுத்தினது. உங்களைத் திக்கற்றவர்களாக்கினது. உங்களை வெட்கத்தாலும் நிந்தையாலும் நிரப்பினது. வேதனையும் கலக்கமும் உங்களை ஆண்டுகொண்டன. உங்கள் ஜீவன் உங்களுக்கே அருவருப்பாய் தோன்றுகிறது. மரணம் உங்களைக் கலங்கச் செய்கிறது. மக்களே! பயப்படவேண்டாம். திடன்கொள்ளுங்கள். உங்கள் பாவத்தை நானே சுமந்துகொள்ளுகிறேன். உங்கள் வெட்கத்தையும் அவமானத்தையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். உங்கள் வேதனையையும் கலக்கத்தையும் நான் அனுபவிக்கிறேன்....

**உங்களுக்குப் பதிலாக நானே என்னைத் தனித்தவனும் சிறுமைப்பட்டவனுமாக்கிக்கொள்ளுகிறேன்" என்று, இந்த முழுக்கு ஸ்நானத்தில் பாவிகளோடு தம்மை ஒன்றாக்கினார்!**

அவர் பாவமானாரென்பதும், சாபமானாரென்பதும், அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டாரென்பதும் இதுதான்! இந்த இரகசியத்தை அறிந்தவர்களே, சிலுவையின் இரகசியத்தை அறிவார்கள்! பாவஞ்செய்த ஆதிமனுஷன் மனுக்குலத்தாரின் கேட்டுக்குத் தலையாயிருந்ததுபோல, பாவமற்ற 'இந்த மனுஷன்' மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்கும் தலையானார்! அல்லேலூயா.

- பரமானந்தம் ஐயர்

---

## 'தேவனுக்கு முன்பாக நின்று' சோதித்து வாழுங்கள்!

**ச**பையில் உள்ள விசுவாசியோ அல்லது ஊழியனோ.... அவர்கள் யாராயிருந்தாலும், தங்கள் அந்தரங்கத்தில் நேரிட்ட சோதனைகளுக்கு 'இரகசியமாய்' தங்களை ஒப்புக்கொடுத்திருந்தால், அது வெகு விரைவிலேயே **ஓர் தொத்து நோயைப்போல** அனேகருக்கு 'மளமளவென்று' பரவிவிடும். இவ்வாறு, மறைவான தொத்து நோய் கொண்டவன் 'ஒருவனை' ஒரு சபை கண்டும் காணாமல் விட்டுவைத்திருந்தால், காலாவட்டத்தில் அந்த சபை சீர்கெட்டுப் போகும்! என்பது தெள்ளத் தெளிவான உண்மையாகும்! அந்த கறைபட்ட தண்ணீர், வெள்ளமாய்

*புரண்டு, புரண்டு, ஏராளமான ஜனங்களை அதிக கறைக்குள் நடத்தி விடும் என்பதும் திண்ணம்!!*

**காரியம் இப்படியாய் இருப்பதால், "நம்மை நாமே தேவனுக்கு முன்பாக நிறுத்தி சோதித்தறிந்து வாழ்ந்திடும் வாழ்க்கை மிக மிக முக்கியம் நிறைந்ததாய் இருக்கிறது!!" தன்னை சோதித்து வாழாத கிறிஸ்தவனின் ஜீவியம் "பண்டு பார்க்காத தோட்டம் போலாகிவிடும்".**

*அந்த அவனுடைய தோட்டத்தில், ஒரு சில மாதங்களுக் குள்ளாகவே, ரோஜா மலர்களல்ல, தக்காளிப் பழங்கள் அல்ல.... 'களைகள்' மண்டி மூடி விடும்!* **தன்னை சோதித்து வாழாத கிறிஸ்தவனின் ஜீவியம் "பூட்டிய வீட்டைப் போலாகிவிடும்".** *உங்கள் வீட்டைப் பூட்டிவிட்டு சில வாரங்கள் கழித்து திறந்து பாருங்கள்.... எங்கிருந்துதான் இவ்வளவு தூசிகள் வந்ததோ என நீங்கள் வியந்து போவீர்கள்! தன்னை சோதித்து வாழாத கிறிஸ்தவனின் ஜீவியம் "கற்றுக் கொடுக்காத பிள்ளையைப் போலாகிவிடும்". உங்கள் பிள்ளைக்கு போதனைகளையும், ஒழுக்கத்தையும் கற்றுத்தர அக்கறை செலுத்தாமல், அப்படியே விட்டு வையுங்கள்.... வெகு விரைவில் உங்கள் பிள்ளை காட்டு-மிராண்டி குணம் படைத்தவனாய் மாறிவிடுவான்!!*

*கவனம்! தேவனுக்கு முன்பாக உங்களை வைத்து, உங்களை ஆராய்ந்து சோதித்து வாழுங்கள்.... இல்லையேல், உங்கள் வாழ்வு சீரழிந்து போய்விடும்!! அந்த கதி நம் ஒருவருக்கும் ஏற்படாதிருக்க தேவன்தாமே அருள்புரிவாராக, ஆமென்.*

*- A.W.டோசர்*

---

## 'மாம்ச திரை கிழித்து' ஜனங்கள் தேவனை அறியும்படி செய்தேன்!

*இன்றைய கிறிஸ்தவ உலகில் 'உபதேசமே' பிரதான இடத்தை பிடித்திருக்கிறது. இதன்விளைவு என்னவென்றால், பெரும்பாலான கிறிஸ்தவ மக்கள் கிறிஸ்துவைப் பற்றியும், வேதத்தைப் பற்றியும் அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள், மெய்யாகவே கிறிஸ்துவையோ வேதத்தின் மகத்துவத்தையோ நேரடியாக அறியவில்லை. மெய்யான ஆவிக்குரிய மகத்துவம், மாம்சத்தின் விருப்பத்திற்கு ஏதுவான பாவதிரைக்குப் பின்னால் மறைந்திருக்கிறது. கர்த்தருடைய பிரசங்கியாய் இருந்த எனக்கு, ஆவியின் பெலனால்* **'இந்த மாம்சத்தின் திரையை' கிழித்து, தேவனை நேரடியாக அறிந்திடும் ஜீவியத்தை காண்பிக்க வேண்டிய கடமையாயிருந்தது!**

*வலிமையற்ற சுவிசேஷத்தால் 'உண்மையான கிறிஸ்தவம்' சீரழிக்கப்பட்டுவிட்டது. "ஒரு நல்ல மனுஷன், தன் நல்ல செய்கையால்*

*பரலோகம் போய் விடுவான்! கெட்ட மனுஷன், கண்டிப்பாய் நரகத்திற்குப் போய் விடுவான்" என்பதே இன்று உலாவி வரும் வலிமையற்ற சுவிசேஷமாகும். இயேசு கிறிஸ்து கொண்டு வந்த "தெய்வ கிருபை" ஜனங்களால் அறியப்படவும் இல்லை, அவர்களால் போதிக்கப்படவும் இல்லை. தாறுமாறான கிறிஸ்தவ போதகத்தின் மத்தியில் "தேவனுடைய கிருபை வரமே நித்திய ஜீவன்" என, சத்தியத்தைப் பிரசங்கித்தேன். யாரெல்லாம் இந்த கிருபை வரத்தை மறுக்கிறார்களோ, அவர்களுக்கு நித்திய ஆக்கினை உண்டு என நான் பிரசங்கித்திடவும் தவறியதில்லை!*

**ஆனால், நான் வலியுறுத்தியதெல்லாம் "தாழ்விடத்து அடித்தளம் வரைக்கும் சென்று" ஈர்த்துக்கொள்ளும் வலிமையான காந்த சக்தியாய் 'இயேசுவின் அன்பு' உள்ளது என்பதை வலியுறுத்திப் பிரசங்கித்தேன்!**

*பழைய நியாயப்பிரமாணத்திற்கும் கிருபைக்கும் உள்ள வித்தியாசத்தை 'கெட்ட குமாரனின் கதையை வைத்து' விளக்கிச் சொல்ல முற்பட்டேன். "கெட்ட குமாரன் மனந்திரும்பி வீட்டிற்கு புறப்பட்டு வந்தபோது, கிருபை அவனை சந்தித்து அணைத்துக் கொண்டது! நியாயப்பிரமாணமோ அவனை 'கல்லெறிந்து கொல்ல வேண்டும்' என கூக்குரலிட்டது. அச்சமயத்தில் எழுந்து வந்த கிருபை, அவனை ஏற்றுக்கொள்ள கரம் நீட்டினது. அடிப்பதற்கு கை ஓங்கினது நியாயப்பிரமாணம்! கிருபையோ அவனை முத்தமிட்டது! கெட்ட குமாரனைப் பின்சென்று அவனைக் கட்டிப்போட்டது நியாயப்பிரமாணம்! ஆனால் கிருபையோ, அவனது கட்டுகளை அவிழ்த்து விடுவித்தது! நியாயப்பிரமாணமோ 'நீ எவ்வளவு கோணலானவன்' என சத்தமிட்டது! கிருபையோ, என்னை நிமிர்த்தி 'நீ நேராக நிற்பதைப் பார்' என உற்சாகப்படுத்தியது" இவ்வாறு தேவ கிருபையின் அன்பை நான் உயர்த்திப் பிரசங்கித்தேன்!*

**நான் ஓங்கி வலியுறுத்தியதெல்லாம் "ஜனங்கள் தேவன் மீது விருப்பமாய் இருப்பதைவிட, தேவன் ஜனத்தின் மீது விருப்பமாய் இருக்கிறார்" என்ற செய்தியை அதிகமாய் வலியுறுத்தினேன்.**

*ஒருவன் தொடர்ச்சியாக நல்லவனாய் வாழ்வதற்கு பிரயாசப்பட்டதற்காக அளிக்கப்படுவதே 'இரட்சிப்பு!' என்ற போலி கிறிஸ்தவ மார்க்கத்தாரின் வலியுறுத்தலை மறுத்தேன்! அதற்கு மாறாக, ஒருவன் கிறிஸ்துவின் ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்கென, மனந்திரும்பும் ஒரு பாவி மாத்திரமே மறுஜென்மத்திற்குள் பிரவேசிப்பான் என்ற நற்செய்தியை அறிவித்தேன். இதுபோன்ற மறுஜென்மம், ஒருவன் மனந்திரும்பி 'ஜீவகாலமெல்லாம்' பெற்றிடும்*

*"உடனடி இரட்சிப்பு" என அடிக்கடி கூறி பிரசங்கித்தேன். அன்று விசுவாசத்தைக் குறித்து மார்டின் லூத்தர் பிரசங்கித்தபோது சந்தித்த 'அதே எதிர்ப்பை' நானும் சந்தித்தேன். ஆகிலும் விசாலமான தேவனுடைய கிருபை வரத்தைக் கேட்டு மகிழ்ந்த அநேக பாரம்பரிய கிறிஸ்தவ ஜனங்கள், இருளின் குழியிலிருந்து குதித்து எழுந்து ஒளியின் கிறிஸ்தவ வாழ்க்கையை கண்டடைந்து, ஒரு பிரகாசமான ஜீவியத்தை வாழத் தொடங்கினார்கள்!*

*அன்று, ஜான் வெஸ்லி, ஒயிட் பீல்டு போன்றவர்களின் பிரசங்கங்கள் கிறிஸ்துவின் மகிழ்ச்சியை கொண்டு வந்து தந்தது. இரட்சண்ய சேனையின் தலைவர் வில்லியம் பூத் பிரசங்கித்தபோது 'ஏழை ஜனங்கள்' தேவ கிருபையின் உதவியைப் பெற்றார்கள். உயர் கல்விச்சாலையில் கற்றுத் தேறாத சாதாரண மனுஷன் நான்! ஆகிலும் என்னைக் கொண்டு, தெய்வ அன்பின் வல்லமையை 'உயர் கல்வி கற்ற ஜனங்கள் மத்தியில்' எழுப்புதல் ஏற்படுத்தி, அநேகரை இரட்சித்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தினேன்!*

*- D.L.மூடி பிரசங்கியார்*

---

## பெற்ற இரட்சிப்பை, நீங்கள் ஏன் பிறருக்குச் சொல்லவில்லை?

'விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறவர்களுக்கு' **விசுவாச மார்க்கத்தார்** என அழைக்கப்படுகிறார்கள்! (கலாத்தியர் 3:9). இதை இயேசு குறிப்பிட்டு கூறும்போது "விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" என கூறினார் (மாற்கு 9:23). தேவன் தம்மை எனக்கு வெளிப்படுத்தி காண்பித்ததைப் போலவே, உங்கள் யாவருக்கும் வெளிப்படுத்தி நீங்களும் 'விசுவாசமார்க்கத்தாராய்' மாறிடவே நான் வாஞ்சிக்கிறேன். சிலர் என்னிடம் "நான் சுகம் பெறுவதற்கு இன்னும் எத்தனை காலமாகும்!" என, கேட்பதுண்டு. அதற்கு விடையாக, நான் மறுபடியும் அவர்களிடம் ஒரு கேள்வியை முன்வைத்தேன் : "நீங்கள் தேவனை விசுவாசிப்பதற்கு இன்னும், எத்தனை காலமாகும்?" என்பதே என் கேள்வி!

பத்து குஷ்டரோகிகள் சுகமான காட்சியை சற்று ஞாபகத்திற்கு கொண்டு வாருங்கள். இவ்வாறு பத்து குஷ்டரோகிகள் ஒரு குழுவாய் சேர்ந்திருந்த காட்சியை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கண்டிருக்கமாட்டீர்கள். அந்த பத்து பேரில், குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்டு சிலர் குருடராகவும், சிலர் விரல்களை இழந்து நொண்டியாகவும், அல்லது அங்கங்களின் ஏதாவது ஒரு அங்கம் பாதிக்கப்பட்டவர்களாயும் இருந்திருப்பார்கள். ஆகிலும்,

*இப்படிப்பட்ட பத்து குஷ்டரோகிகளும் 'ஒன்று சேர்ந்து' இயேசுவை காண விரும்பினார்கள். அவரை அவர்கள் கண்டு, சத்தமிட்டு கூப்பிட்டார்கள். அது ஏனென்றால், அந்நாட்களில் குஷ்டரோகிகள் யாதொருவரையும் நெருங்கி வர அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் சத்தமிட்டு "இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும்" என பலமாய் கூப்பிட்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, அவர்களைப் போலவே சத்தமிட்டு "நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களை காண்பியுங்கள்!" என்றார் (லூக்.17:13,14).*

*'பத்து குஷ்டரோகிகள்' என்ற நிலை 'ஏதும் இயலாது' என்ற நிலையல்லவா! மனுஷீகப் பார்வையில், இவர்களின் நிலைமை 'எதுவும் முடியாது அல்லது சாத்தியமில்லை' என்ற நிலைதான். அந்த காட்சியை உங்கள் கண் முன் நிறுத்தினால், ஒரு குஷ்டரோகி மற்றொரு குஷ்டரோகியை உதவிக்கு சார்ந்து நின்ற நிலையாகவே இருந்தது. குருடாய் இருந்த குஷ்டரோகிக்கு, பார்வை பாதிக்கப்படாத குஷ்டரோகிகள் உதவி செய்தார்கள்! கை அல்லது கால் முடமாய் இருந்த குஷ்டரோகிக்கு, பாதங்கள் பாதிக்கப்படாத குஷ்டரோகிகள் உதவி செய்தார்கள். இயேசு கூறிய வார்த்தையை நம்பி, அவர்கள் அனைவரும், இவ்விதமாய் ஒருவருக்கொருவர் உதவி செய்து 'ஆசாரியர்களைக் காண' விரைந்து சென்ற காட்சி ஆச்சரியமானது!*

**இவ்வாறு ஆசாரியர்களுக்குத் தங்களை காண்பிக்கச் சென்ற பாதி வழியில், அவர்கள் அனைவருமே சுகம் பெற்று விட்டார்கள்! (லூக்.17:14). அது எப்படி? அந்த பத்துபேரும் விசுவாசித்தபடியால், பத்து பேரும் சுகம் பெற்றார்கள்! அல்லேலூயா.**

*அந்த பத்துபேரில் ஒரே ஒருவன் மாத்திரம் "அடுத்த பாதி தூரம் நடந்து ஆசாரியரை சந்திக்க நான் விரும்பவில்லை! அதற்குப் பதிலாய், நம் அனைவரையும் சுகமாக்கிய அந்த நல்லவர் இயேசுவை காண்பதற்கே நான் திரும்பி அவரிடம் செல்லுகிறேன்" எனக் கூறி, இயேசுவிடம் திரும்பி வந்தான்.*

*அவனைப் பார்த்த இயேசு "சுத்தமானவர்கள் பத்துபேர் அல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? **தேவனை மகிமைப்படுத்துவதற்கு, இந்த ஒருவனைத் தவிர மற்றொருவனும் திரும்பி வரக்காணோமே?**" என வருத்தத்துடன் கேட்டார் (வச.15-19). நம் நாட்களில், இன்றுள்ள ஜனங்களின் நிலைமையும் இவ்வாறாகவே இருக்கிறது. அநேகர் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள்! அநேகர் சுகம் பெற்றிருக்கிறார்கள்! இவர்கள் தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்றால், சும்மா நின்று, "அல்லேலூயா ஸ்தோத்திரம்" என கூறிவிட்டால், தேவன்*

*மகிமைப்பட்டு திருப்தி அடைந்து விடுவாரா? பரத்திலிருந்து இரட்சிப்பையும் சுகத்தையும் பெற்றவர்கள், ஜனங்களிடத்தில் திரும்பி வந்து, கர்த்தர் தங்களுக்குச் செய்த இரட்சிப்பையும், சுகத்தையும் அவர்களுக்கு அறிவித்திருந்தால், தேவன் நிச்சயமாய் மகிமைப்பட்டிருந்திருப்பார்!*

**அப்படியானால், தேவன் தங்களுக்குச் செய்தவைகளை மற்ற ஜனங்களுக்கு இவர்கள் ஏன் அறிவிக்கவில்லை? இதுவே தேவனுக்கு சொல்லிமுடியாத துயரம்! இந்த துயரமே, எனக்கும் உள்ளது. இப்படியும் கிறிஸ்தவர்கள் இருக்கக்கூடுமா? என்றே ஆச்சரியப்படுகிறேன்.**

*கர்த்தர் தம்முடைய சீஷர்கள் அனைவரையும் பார்த்து, உலகத்தின் கடையாந்திரம் மட்டும் சென்று 'ஜனங்கள் மீட்கப்படும் நற்செய்தியை அறிவிக்கும்படி' கட்டளையிட்டார்! இது எஜமானின் கட்டளையல்லவோ? இந்த கட்டளைக்குரிய பதிலை எஜமானாகிய இயேசுவுக்கே நேரடியாக தர வேண்டிய பொறுப்பு நம்முடையதல்லவா? ஆகிலும், நம்மை வெறுமையாய் சுவிசேஷம் சொல்லும்படி அவர் கட்டளையிடாமல் "எருசலேமில் காத்திருந்து பரத்திலிருந்து* **நான் அனுப்பும் வல்லமையை** *பெற்று செல்லுங்கள்! இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம்* **நான் உங்களோடு இருப்பேன்"** *என்ற வாக்கை சீஷர்களுக்குத் தந்தே, சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கட்டளையிட்டுள்ளார்!*

*இயேசுவின் கட்டளையை விசுவாசித்து புறப்பட்டுச் செல்லும் யாராயிருந்தாலும், அவர்கள் சுவிசேஷம் அறிவிக்கும் இடமெல்லாம் 'அற்புதங்கள் பல நிகழ்த்தி' தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்துவார்! ஆமென் (மாற்கு 16:20).*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

---

## சுவிசேஷம் அறிவிக்காதவர் 'பரிசுத்தம்' நிலைநிற்பதில்லை!

*"நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்!" என, தன் சீஷர்களுக்கு இயேசு கட்டளையிட்டார் (லூக்கா 16:15). இயேசுவை தன் குருவாய், ஆண்டவராய் பெற்றவர்கள் யாவரும், அவரது இந்த சுவிசேஷ கட்டளைக்கு 'தங்கள் மேல் விழுந்த கடமை' என நிச்சயமாய் மனமுவந்து கீழ்ப்படிவார்கள்! (1கொரி.9:16).*

*இந்த உலகில் 'ஏழையாய்' இருப்பவர்களுக்கு உதவ, அனேகர் விரும்புவதற்கு பிரதான காரணம் 'தங்கள் தர்மத்தை' எல்லோரும் அறிய, தாரை ஊதி புகழ்தேடுவதே! என இயேசு கூறினார் (மத்.6:2).*

*புறஜாதியார் தொடங்கி, கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் கூட அப்படிச் செய்கிறார்கள். ஆனால் இயேசுவோ "தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே* **கர்த்தருடைய ஆவியானவர்** *தன்மேல் இருப்பதாக" கூறினார்! (லூக்.4:18). உலகின் 'சர்வ சிருஷ்டியும்' இயேசுவின் இரட்சிப்பை அறியாத தரித்திரர்களேயாவர். பொருளைவிட, ஆத்துமாவின் தரித்திரம் போக்கவே குருவாகிய இயேசுவும், அவரது சீஷர்களும் பிரதானமாய் நாடுவார்கள்! திமிர்வாதக்காரனை சுகமாக்கியதைவிட, அவன் பாவத்தையே முதலாவது இயேசு மன்னித்து, அவனுக்கு இரட்சிப்பை அருளி, 'எது முக்கியம்?' எனவும் போதித்தார்!*

**ஆகவே "ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்!" என கூறும் வேத வாக்கியம், "தரித்திரர்களுக்கு சுவிசேஷம் கொடுப்பதையே" பிரதானமாய் குறிப்பிடுகின்றது (2கொரி.9:9).**

*தரித்திரர்களாகிய நாம், சுவிசேஷம் பெற்று ஆசீர்வதிக்கப் பட்டிருந்தால், நம்மைச் சுற்றியுள்ள தரித்திரர்களுக்கு நாம் பெற்ற சுவிசேஷத்தை கொடுப்பது நம் தார்மீக நீதியல்லவா?*

*இயேசுவின் சுவிசேஷம் பெற்றவர்கள் யாவருமே, இந்த தேவநீதியை உணர்ந்து, அவர்களாகவே மனப்பூர்வமாய் 'ஏழைகளுக்கு' வாரியிறைப்பார்கள்! தங்களை மீட்ட இரட்சகரின் கட்டளையாதலால், "சுவிசேஷத்தை ஆர்வமுடன்" பிறருக்கு அறிவிப்பார்கள்! அப்படிப்பட்டவர்களின் நீதி, பரிசுத்தம், உத்தமம் கிறிஸ்து வரும்வரை என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும்! இந்த பரத்தின் கடமையை, ஆத்தும பாரமில்லாமல், தனக்காகவே கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதால், அடைந்திடும் நஷ்டத்தை இந்த வசனம் நமக்கு எச்சரிக்கிறது! அதுஎன்னவெனில்: ஒரு காலத்தில் நாம் வைத்திருந்த தெய்வ பயத்தில் தொய்வு! பரிசுத்தத்தில் ஏற்படும் மந்தநிலை! பெற்ற தாழ்மை மங்கி ஏற்படும் அகந்தை! பணிவிடை சேவையிலிருந்து விலகி, ஆளுகை செய்யும் விருப்பம்! உலகத்தை வெறுப்பதிலிருந்து பின்னடைந்து பண ஆசை! ஆகிய பின்மாற்ற சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நடைபெற்று.... அவர்களின் நீதி நிலைநிற்பதில்லை என்ற அவலத்தை, நாம் அனைவரும் எச்சரிக்கையாய் எடுத்துக்கொள்வோமாக!*

*தூங்குகிற நிலையிலிருந்து மீண்டும் எழும்பி "சுவிசேஷ பாரம் கொண்டு" பிரகாசிக்கக்கடவோம்! அப்போது, கிறிஸ்து நமக்கு மீண்டும் ஒளிதந்து நடத்துவார்! ஆமென் (எபே.5:14-16).*

*- T.ரத்தினகுமார்*

## 'நர்ஸ்' தேவ அழைப்பை நிறைவேற்றி வாழ்ந்த
## கைவிளக்கு பிளாரன்ஸ் நைட்டிங்கேல்!



இத்தாலி நாட்டில் பிறந்த பிளாரன்ஸ் நைட்டிங்கேல் தனது 16-வது வயதில் ஏழை வியாதிப்பட்ட மக்களுக்கு தன்னால் இயன்ற உதவி செய்ய வேண்டும் என தேவப் பணிக்கு அர்ப்பணித்தார். செவிலியர் பயிற்சி எடுத்த பிளாரன்சுக்கு அவளுடைய பெற்றோர் ஆதரவு தரவில்லை. 1800-ம் ஆண்டு காலத்தில் செவிலியர் பணி தாழ்வான பணியாகவும், எளிதில் கற்பு ஒழுக்கத்திலிருந்து வழிவிலகும் பணியாகவும் கருதப்பட்டது. தன் அழைப்பில் உறுதியாய் நின்ற பிளாரன்ஸ், ஜெர்மனிக்கு சென்று நர்ஸிங் உயர்கல்வியை முடித்தார். லண்டன் தலைமை மருத்துவமனையில் நர்ஸிங் கண்காணிப்பாளராக பதவி பெற்றார். பெரிய கோடீஸ்வரர்களின் வரனை ஏற்றுக்கொள்ள பெற்றோர்கள் வற்புறுத்தினார்கள். அதற்கு பதிலளித்த பிளாரன்ஸ் "ஐஸ்வர்ய வாழ்க்கை எனக்கு தற்கொலை வாழ்க்கையாக தோன்றுகிறது" என கூறவே பெற்றோர்கள் அவரை கைவிட்டு விட்டனர். இதனால் அடிக்கடி பிளாரன்ஸ் மனச்சோர்வுக்குள் உள்ளானார்.

இக்காலத்தில்தான் ரஷ்யாவிற்கும் இங்கிலாந்திற்கும் யுத்தம் நடந்தது. பல்லாயிரக்கணக்கான காயமடைந்த பிரிட்டிஷ் படையினர் சரியான பராமரிப்பு இன்றி கொத்து கொத்தாக மரித்தனர். 'பிரிட்டிஷ் போர்துறை' பிளாரன்ஸ் நைட்டிங்கேல் உதவியை நாடினார்கள். சுமார் 40 செவிலியரை அழைத்துக் கொண்டு ராணுவ மருத்துவமனைக்குச் சென்றார்கள். அவரோடு பணியாற்றிய செவிலியர் சரியான ஒத்துழைப்பு தரவில்லை. நோயாளிகளின் கழிப்பறையை பிளாரன்ஸ் நைட்டிங்கேல், தானே சென்று சுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இரவு பகலாக காயமடைந்து வரும் போர் வீரர்களுக்கு ஓய்வும் உறக்கமும் இல்லாமல் இரவு முழுவதும் "கை விளக்கு ஏந்தி" வலியால் துடித்த வீரர்களின் படுக்கைக்கு சென்று, மருந்து கொடுத்து காயங்களை கட்டினார்! சுமார் 8000 வீரர்கள் சுகமடைந்து போருக்கு திரும்பினர். 1856-ம் ஆண்டு போர் முடிந்ததும் வீட்டிற்குத் திரும்பிய பிளாரன்ஸ் நைட்டிங்கேலுக்கு தொற்று நோயான கிரிமியன் காய்ச்சல் (Crimean Fever) ஏற்பட்டது. அச்சமயம் யுத்தத்தின்போது பிளாரன்ஸ் நைட்டிங்கேல் காட்டிய தன்னலமற்ற செவிலிய பணியால், யுத்தம் பிரிட்டிஷ் சார்பாக ஜெயிப்பதற்கு பெறுமளவு உதவியது என செய்தி தாளில் பிரசுரிக்கப்பட்டது. இரவு நேரத்தில் பிளாரன்ஸ் கை விளக்கோடு ஒவ்வொரு காயம்பட்ட வீரர்களை அணுகி செய்த பணியை போற்றி "கை விளக்கு ஏந்திய காரிகை" என்ற பட்டமும், 1904-ம் ஆண்டு "இரக்கத்தின் பெண்மணி" என்ற பட்டமும் சூட்டப்பட்டது.

கடைசியாக, "அநேகருடைய கவனம் என்மீது திரும்புவதை நான் விரும்பவில்லை" என தாழ்மையுடன் கூறிய பிளாரன்ஸ் நைட்டிங்கேல் 1910-ம் ஆண்டு தன்னுடைய 90-ம் வயதில் கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்தார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## 'பாவ கூண்டிலிருந்து' விடுவிக்க வல்லவர் இயேசு ஒருவரே!

நேப்பாளத்தின் தலைநகர் காத்மாண்டுவிலுள்ள மிருக காட்சி சாலையைப் பார்க்கும்படியானதொரு சந்தர்ப்பம் எனக்கு கிட்டியது.

ஓரிடத்தில் இரண்டு பெரிய காண்டாமிருகங்கள் மிகவும் சாவதானமாக தங்களுக்கு முன்பாகப் போடப்பட்டிருந்த புல்லை மேய்ந்து கொண்டிருந்தன.

அந்த மைதானத்தை சற்று கூர்மையாக பார்த்தபோது ஒரு கெபி போன்ற இடத்தினுள் மிருகங்களுக்கெல்லாம் அரசனான ஒரு பெரிய சிங்கம் மல்லாக்க படுத்து தனது நான்கு கால்களையும் ஆகாயத்துக்கு நேராக உயர்த்திக் கொண்டிருந்தது. குளிரான அந்த பனி காலத்தின் மத்தியான வெயில் அதற்கு அத்தனை இதமாக இருந்தது. அதினுடைய சந்தோசத்திற்கு அளவில்லை!

அந்த மிருகேந்திரனான சிங்கத்தின் சந்தோச களிப்பு எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. எந்த விதத்திலும் அது அங்கிருந்து வெளியே தப்பி ஓடிவிடாமலிருக்க அதைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள உயரமான சுற்று மதிலையும், அதற்கு மேலாக நாட்டப்பட்டிருந்த ஈட்டி கம்பிகள் வேலியையும், அது சற்றும் சிந்தித்து கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

தனது விலையேறப்பெற்ற ஆத்துமா, சத்துருவாகிய பிசாசின் நித்தியமான கிடுக்குப் பிடியில் சிக்குண்டு இருப்பதையும், தன்னால் விடுவிக்கக்கூடாத பாவ பழக்க வழக்கங்களான இரும்புக்கூண்டுக்குள் அடைபட்டிருப்பதையும், தனது முடிவு நித்தியமான நரகம் என்பதையும் மனிதர்கள் உணர்ந்தபாடில்லை. உலகத்தின் மாயையான அற்ப நிமிட நேர இன்பங்களில் அவன் பூரிப்படைந்து, இந்த வையகத்தின் மண்ணிலே மேலே கண்ட சிங்கம் போல உருண்டு புரண்டு கொண்டிருக்கின்றான்.

வாலிபனே, உன்னை 'பாவ கூண்டிலிருந்து' விடுவிக்கும் இயேசு இரட்சகரை நோக்கிப்பார்த்து சீக்கிரமாய் விடுதலை பெறுவாயாக! உன் பாவ கூண்டிலேயே நீ மாய்ந்து போகாதபடி மனந்திரும்புவாயாக!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**